
## கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 4 - மனந்திரும்பின கள்ளன்




ஆண்டவர் எவ்வாறு தமது கிருபையை, பல்வேறு நேரங்களில், பலவிதங்களில், சில தனிப்பட்ட மக்களின் வாழ்க்கையில் அருளும் பொழுது, அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்து எவ்வாறு இரட்சிப்பை, மீட்பை, நித்திய ஜீவனை பெற்றார்கள் என்பதை நாம் கடந்த மூன்று பாகங்களில் கண்டோம். இந்த நான்காம் பாகத்திலும், மிகவும் முக்கியமான ஒரு தருணத்திலே, ஆண்டவர் சிலுவையில் தமது ரத்தத்தை, அனைத்து மக்களுக்காகவும் சிந்துகிற வேளையில், அவருடைய கிருபையை உணர்ந்து, அதை பற்றிப் பிடித்துக்கொண்டவன் தான், சிலுவையில் அவரோடு கூட அறையப்பட்ட கள்ளரில் ஒருவன். அவனுடைய பெயர் உள்பட, அவனைப் பற்றிய எந்த தகவலும் வேதாகமத்தில் பதியப்படவில்லை. வேதாகமத்தில் அவன் கள்ளன் / குற்றவாளி என்பது மட்டும்தான் பதியப்பட்டுள்ளது. ஆனாலும் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை, சிலுவையில் வேதனையோடு தொங்கிக்கொண்டிருந்தாலும், இன்னும் சில மணி நேரங்களில் ஆண்டவரோடு பரதீசில் பிரவேசிக்கும் பாக்கியத்தை இந்த கள்ளன் பெற்றான். அதை ஆண்டவரே அவனுக்கு வாக்குப் பண்ணினார் **(லூக்கா 23:43)**. ஆம், இந்த வார்த்தையை கேட்ட பின்பு நிச்சயமாக, அந்த கள்ளனின் உடல் சிலுவையில் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அவனுடைய ஆத்மா, ஆண்டவரே உம் கரத்தில் என் ஆவியை ஒப்பவிக்கிறேன் என்று கூறி, அவரோடு கூட பரதீசில் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கும். ஆம் ஒருபுறம், தான் வாழ்நாளெல்லாம் செய்த குற்றத்திற்கு தண்டனையை தன் உடல்

அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அவனுடைய ஆவியோ, எப்போது நான் பரதீசில் பிரவேசிப்பேன் என ஆவலோடு காத்திருந்திருக்கும். அவனுடைய ஆவி அவன் சரீரத்தில் இருந்து பிரிந்த அவ்வேளையில், அவன் கள்ளன் என்ற, பாவி என்ற, குற்றவாளி என்ற நிலையில் இருந்து, மீட்கப்பட்டவன், இரட்சிப்பை கண்டடைந்தவன், பரதீசிக்கு உரியவன் என்ற நிலைக்கு மாற்றப்பட்டான். இதற்கு காரணம், ஆண்டவர் அவனுக்கு கொடுத்த கிருபையின் தருணத்தை அவன் பற்றிக்கொண்டதே ஆகும்.

இங்கு விசேஷமான காரியம் என்னவென்றால், மற்றவர்களுடன் ஆண்டவர் இடைப்பட்டார், ஆனால் இங்கு ஆண்டவர் அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை, ஆனால் சிலுவையில் அவர் தொங்கின காட்சி, அவருடைய முகரூபம், அவர் வாயில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள், அவர் தேவகுமாரன் என்பதை அந்த கள்ளன் உணர்ந்து கொள்ளும்படி செய்தது. ஆரம்பத்தில் மற்றவர்களைப் போல அவனும் அவரை நிந்தித்தான். ஆனால் நேரம் போக போக, அவன் சில காரியங்களை உணர்ந்து கொண்டான். அதனால் தன் வாழ்வின் மரண தருவாயில், அருமையான மீட்பை பெற்று, நேரடியாக பரதீசுக்கு ஆண்டவருடன் சென்றடைந்தான். அப்படிப்பட்ட காரியங்கள் என்னவென்பதை நாம் பின்வருமாறு தியானிப்போம்.

**லூக்கா 23:33** கூறுகிறது, **“கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்.“** இதே நிகழ்வு **மத்தேயு 27:38**லும், **மாற்கு 15:27**லும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மத்தேயுவிலும், மாற்க்கு சுவிசேஷத்திலும் **“அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.“ (மத்தேயு 27:44), மாற்கு 15:32** என்று பதியப்பட்டுள்ளது. ஆனால் அதன்பின் நடந்த இந்த அருமையான சிறு நிகழ்வை **லூக்கா 23:39-43** வசனங்கள் பின் வருமாறு பதிவு செய்கிறது, **“அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு**

**அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**". இதில் மிகவும் அருமையான காரியம் என்னவென்றால், மொத்தம் உள்ள ஐந்து வசனங்களில், முதல் வசனம் மற்றொரு கள்ளன் பேசுவதை பதிவு செய்கிறது. இரண்டு மற்றும் மூன்றாம் வசனம் மனந்திரும்பின கள்ளன் மற்றொரு கள்ளனை பார்த்து பேசுவதை பதிவு செய்கிறது. **லூக்கா 23:42** வசனம் மட்டுமே மனந்திரும்பின கள்ளன் ஆண்டவரை பார்த்து பேசியது பதியப்பட்டுள்ளது. இறுதியில், **லூக்கா 23:43**இல் ஆண்டவர் அவனுக்கு கொடுத்த மறுமொழி பதியப்பட்டுள்ளது. நடந்த காரியங்கள், உரையாடல்கள், ஒரு சில மணித்துளி நேரமாயிருந்தாலும், அவனுக்கு அது நித்திய இரட்சிப்பை கொண்டு வந்தது. அதனை ஒவ்வொன்றாக தியானிப்போம்.

**லூக்கா 23:39** கூறுகிறது, "**அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.**", இங்கு இந்த கள்ளன் தான் செய்த குற்றத்திற்கு, தான் வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையிலும், அவனுடைய துர்குணம், இன்னும் மற்றவரை காயப்படுத்துவதிலேயே இருந்தது. ஆண்டவரை சுற்றி இருந்த பரிசேயர் மற்றும் யூதர்கள் அவரை இவ்வாறு இகழ்ந்த பொழுது, அவனும் அதே வார்த்தைகளை சொல்லி இகழுகிறான். மற்ற சுவிசேஷங்களில் பதியப்பட்டுள்ளபடி மனந்திரும்பின கள்ளனும் முதலில் ஆண்டவரை இழந்தாலும், நேரம் செல்ல செல்ல, அவர் சிலுவையில் சொல்லிய வார்த்தைகள் மற்றும், ஒருபுறம் பரிசேயர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவர்கள் ஆண்டவரை இகழ்ந்தாலும், அவருக்காக கதறி அழும் மற்றவர்களையும் அவன் கண்டபோது, அவனுடைய இருதயத்தில் மாற்றம் உண்டானது. **லூக்கா 23:40** கூறுகிறது "**மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?**", என்று. ஆம் முதலாவது தேவ பயம் அவனுக்குள்ளாய் உண்டானது. சிலுவையில் அறையப்பட்டது மனிதரால் மட்டும் உண்டான தண்டனை அல்ல, அது தேவனால் தங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

மேலும், **லூக்கா 23:41** இல், "**நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,**". இங்கு தான் செய்தது தவறான செயல்கள் என்பதும், அதற்கேற்ற தண்டனையையே தான் அனுபவித்துக் கொண்டிருப்பதையும் அறிக்கையிடுகிறான். இங்கு இரண்டு காரியங்களை நாம் காணலாம், ஒன்று

அவனுடைய இருதயத்தில் தேவ பயம் உண்டானது, இரண்டு அவன் தான் பாவி என்பதை உணர்ந்து கொண்டான். அதற்கான தண்டனையையும் அவன் மனதார ஏற்றுக்கொண்டான். அதே நேரத்தில், ஆண்டவர் படும் இவ்வேதனை அவருக்காக அல்ல என்பதை உணர்ந்து கொண்டான். அதுவே அவன் உணர்ந்து கொண்ட மிகப்பெரிய சத்தியமாகும். ஆண்டவர் சிலுவையில் தொங்குவது அவருக்கு கிடைக்க வேண்டியது அல்ல, அது தன்னைப் போன்ற பாவிகளுக்கு கிடைக்க வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்து கொண்டான். ஆனால் ஆண்டவர் சிலுவையை ஏற்றுக் கொண்டார் என்றால், நிச்சயமாக அவர் மீட்பராகிய கிறிஸ்துவாகத்தான், மேசியாவாகத்தான், இருக்க வேண்டும் என்பதை அவன் உள்ளம் உணர்ந்து கொண்டது. ஆம், ஆண்டவர் அவனுடன் தனிப்பட்ட முறையில் இடைபடா விட்டாலும், அவர் சிலுவையில் தொங்கிய காட்சியே அவனை இரட்சிப்பதற்கு போதுமானதாக இருந்தது.

இந்த கிருபையின் தருணத்தை சரியாக பற்றிப் பிடித்துக்கொண்ட இந்த கள்ளன், **லூக்கா 23:42** இல், **“இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.**“. மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவின் ராஜ்யத்தில், தன் ஆத்துமாவும் இளைப்பாற வேண்டும் என்ற வேண்டுதலை அவரிடம் வைக்கிறான். சிலுவையில் வேதனை மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த அவ்வேளையிலும் ஆண்டவர் அவனுடைய இருதயத்தில் உண்டான மாற்றத்தை கண்டார். மூன்றரை வருட ஊழிய காலத்தில், அவன் ஆண்டவரை சந்திக்காமல் போனாலும், இந்த கடைசி மணித்துளியில் ஆண்டவர் அவனுக்கு மேன்மையான பரதீசை வாக்குப்பண்ணினார். **“இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.“ (லூக்கா 23:43)**. ஆம், நித்திய வாழ்வுக்கான மேன்மையை, அவன் தன் உலக வாழ்க்கையின் இறுதி மணித்துளிகளில் பெற்றான். அவனுக்கு கொடுக்கப்பட்ட இந்த சிறிய கிருபையின் தருணத்தை பற்றிப்பிடித்துக்கொண்டான். இச்சம்பவம் ஆண்டவர், எப்படிப்பட்ட மனிதனின் வாழ்வையும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மாற்ற முடியும் என்பதற்கு, நமக்கு ஒரு நம்பிக்கையின் சான்றாக உள்ளது. இப்படிப்பட்ட ஆண்டவருடைய கிருபைகளை, நாம் இவ்வுலகில் வாழும் வேளையிலேயே பெற்றுக்கொள்வோமாக. ஆண்டவர் அருளும் மீட்பை, இரட்சிப்பை, இம்மையிலும், மறுமையிலும் பெற்று அனுபவிக்க ஆண்டவர் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.